வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,646,19,31,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.105,06,29,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23–4–2010) வெள்ளிக்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

2. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

68. மானியக் கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010–2011. (தமிழ், ஆங்கிலம்)

69. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் 2010–2011 ஆம் ஆண்டிற்கான செயலாக்கம் என்கிற சிறு நூல். (தமிழ்)

2010 ஏப்ரல் 22]

70. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் "குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வளர்ச்சிப் பாதையில்" என்கிற சிறு நூல். *(தமிழ்)*

71. தொழில் வணிக ஆணையரகம் மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் குறித்த கையேடு. *(தமிழ்)*

72. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2010–2011. (தமிழ்)*

தமிழ்நாடு சட்டப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS